வேங்கைகுறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திருமதி.நா.வெள்ளையம்மாள் அவர்கள்

ந.க.எண்: ம/அ/1/2024-2025 **நாள்:27.07.2024**

பொருள்: மனைப்பிரிவு அனுமதி - திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை ஊராட்சி ஒன்றியம் - வேங்கைகுறிச்சி கிராமம் புல எண்கள் 243/5A,243/5B3,244/1A – ல் அமைந்துள்ள 2.21.50 ஹெக்டர் (ஏக் 5.47) பரப்பளவில் அமைக்கப்பட்டிருக்கும் மனைப்பிரிவிற்கு இறுதிநிலை ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக

பார்வை:

1. அரசானை நிலை எண் 71, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை **நாள்: 16.06.2013**
2. திரு.1.மௌலானா ஆசாத் மற்றும் 6 நபர்கள் விண்ணப்பம் **நாள்: 26.05.2023**
3. மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குனர் திருச்சிராப்பள்ளி மாவட்டம் அவர்களின் **ந.க.எண்: 21ADP20M நாள்: 26.06.2023** கடிதம் மற்றும் ம.வ/ந.ஊ.இ.இ.(தி.மா) **எண்: 90/2023**
4. மணப்பாறை சார்பதிவகம் நன்கொடை ஆவண எண்: **4628/2023,4631/2023 நாள்: 21.06.2023**
5. வேங்கைகுறிச்சி ஊராட்சி மன்ற **தீர்மான எண்:30/2024-2025** **நாள்: 24.06.2024**

உத்தரவு:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை ஊராட்சி ஒன்றியம், வேங்கைகுறிச்சி கிராமம் புல எண்கள்:243/5A,243/5B3,244/1A -ல் அமைந்துள்ள 2.21.50 ஹெக்டர் (ஏக் 5.47) பரப்பளவு கொண்ட இடத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி நகர் ஊரமைப்புதுறைக்கு பார்வை 2ல் காணும் கடிதம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்டு உரிய நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.இ.இ.(தி.மா) எண்: 90/2023 உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குனர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை நிறைவேற்றும் விதமாக 93 மனைகளாக பிரித்தும் சாலை, வடிகால், குடிநீர் குழாய் வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மனுதாரர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதனையும் மேலும் தெருவிளக்கு வசதிகள் செய்து கொடுப்பதாக உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளதை ஏற்றும் வேங்கைகுறிச்சி ஊராட்சி மன்ற **தீர்மானம் எண்:30/2024-2025 நாள்:24.06.2024** படி தீர்மானம் இயற்றப்பட்டது. மேலும் அரசாணையின்படி மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் **ரூ.5,500/- (ஐந்தாயிரத்து ஐநூறு மட்டும்)** வேங்கைகுறிச்சி ஊராட்சி பலவகை **இரசீது எண்:2024-2025/16/4/21/7/1 நாள்:27-06-2024** செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவின் மொத்த இடத்தின் மதிப்பில் 3% நிலப் பயன்மாற்று கட்டணமாக 2.21.50 **ஹெக்டர் ரூ.82,050/- (என்பத்து இரண்டாயிரத்து ஐம்பது மட்டும்)** ஐ **இரசீது எண்:2024-2025/16/4/21/7/2 நாள்:27-06-2024** உரிய தலைப்பின் மூலம் வேங்கைக்குறிச்சி ஊராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. வேங்கைகுறிச்சி ஊராட்சி மன்றத்திற்கு மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா, சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு 7989.53 சதுர மீட்டர் நிலமும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட 145.05 சதுர மீட்டர் இடமும் பார்வை 4ல் காணும் நன்கொடை ஆவண பத்திர எண்: **4628/2023, 4631/2023** நாள்: 21.06.2023 வாயிலாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனை ஏற்று பார்வை 5-ன் படி வேங்கைகுறிச்சி ஊராட்சி மன்றத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு இறுதியாக உத்தேச தொழில்நுட்ப அனுமதியில் குறிபிடப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏதும் விடுபட்டிருப்பின் அதனையும் நிறைவேற்றி தரவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் வேங்கைகுறிச்சி ஊராட்சி கிராம சர்வே எண்: **243/5A,243/5B3,244/1A** ல் அமைந்துள்ள 93 மனைகளுக்கு இறுதிநிலை ஒப்புதல் வழங்கி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

V.வெள்ளியம்மாள்
தலைவர்
வேங்கைகுறிச்சி ஊராட்சி
மணப்பாறை ஊராட்சி ஒன்றியம்.

தலைவர் / செயல் அலுவலர்
வேங்கைகுறிச்சி ஊராட்சி,
மணப்பாறை ஊராட்சி ஒன்றியம்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்